FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 12 (2019) | பொதுத்தகவல் தொழினுட்பம் GIT | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி I

1. தசம் எண் 63 இன் துவிதச் சமவலு
   a) 111111 b) 101111 c) 11111 d) 111011

2. பதின்ம எண் $42_{10}$ இற்குச் சமவலுவான துவித எண் யாது
   a) $101100_2$ b) $10101_2$ c) $111010_2$ d) $101010_2$

3. குமாரின் வயது 22, அவனுடைய இளைய சகோதரனின் வயது குமாரின் வயதின் அரைமடங்காகும். குமாரின் இளைய சகோதரனின் வயது துவித எண் வடிவில்
   a) 1010 b) 1011 c) 1001 d) 1100

4. 3 கிலோ பைற்றுக்களுக்கு சமவலுவானது
   a) 3072 பைற்றுககள் b) $3* 2^{13}$ பிற்றுக்கள் c) $3*2^{10}$ பிற்றுக்கள் d) a யும் b யும்

5. பின்வரும் மெய்நிலை அட்டவணையை ஒத்த தருக்கச் செய்பணியைத்(logical operation ) தெரிவு செய்க.

| உள்ளீடு A | உள்ளீடு B | வருவிளைவு |
|---|---|---|
| 0 | 0 | 1 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 0 |

   a) A OR B
   b) A AND B
   c) NOT (A OR B)
   d) NOT (A AND B)

6. அட்டவணையினால் எந்தப் பூலியன் தொடர்பு மெய்யுறுத்தப்படுகின்றது?
   a) A OR NOT(A) =1 b) A OR A = A
   c) A AND NOT(A) =0 d) A OR 1 = 1

| A | NOT(A) | Output |
|---|---|---|
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |

7. பதினறும எண்முறைமையில் பயன்படுத்தப்படும் குறியீடுகளின் எண்ணிக்கை எத்தனை?
   a) 2 b) 8 c) 16 d) 10

8. பின்வருவனவற்றுள் மிகப் பெரிய பெறுமானம் எது?
   a)$1101_2$ b) $17_{10}$ c) $1110_2$ d) $1010_2$

agaram.lk

9. Unicode குறிமுறைமையில் ஒரு வரியுரு (character) வினைப் பிரதிநிதித்துவம் செய்யத் தேவையான இழிவு பிற்றுக்களின் எண்ணிக்கை யாது?

a) 7 b) 4 c) 8 d) 16

10. எண் $101_x$ ஐக் கருதுக. இங்கு ‘x’ ஆனது எண் முறைமையின் அடியாகும். எண் $101_x$ பின்வரும் எண் முறைமைகளில் எதற்கு/எவற்றிற்கு உரியது?

a) துவிதம் மாத்திரம் b) பதினறுமம் மாத்திரம்

c) எண்மம் மாத்திரம் d) துவிதம் அல்லது பதினறுமம் அல்லது எண்மம்

11. “கணினியின் மூளை” என அழைக்கப்படுவது பின்வருவனவற்றுள் எது?

a) வன்வட்டு (Hard disk) b) RAM

c) முறைவழியாக்கி(Processor) d) தாய்ப்பலகை (Motherboard)

12. கணினிமுறைமை ஒன்றின் உள்ளீட்டுக் கருவிகளுக்கு உதாரணமாக அமைவது/ அமைபவை பின்வருவனவற்றுள் எது/எவை?

A – அச்சுப்பொறி B – பட்டைக் குறிமுறை வாசிப்பான்

C – திரை D – விசைப்பலகை

a) A மட்டும் b) A, B மட்டும் c) A,C,D மட்டும் d) B, D மட்டும்

13. கீழே தரப்பட்டுள்ள சாதனங்களைக் (devices) கருதுக.

A- இலக்கமுறைக் கமரா B – வருடி C- CCTV

மேற்குறித்தவற்றில் கணினியில் இலக்கமுறைப் படிமங்களை (digital images) கணினிக்கு நேரடியாக உள்ளீடு செய்யப் பொதுவாக பயன்படுத்தப்படுபவை எது/எவை?

a) A, B மட்டும் b) B, C மட்டும் c) A, C மட்டும் d) A, B, C எல்லாம்

14. பின்வருவனவற்றுள் எது ஒளியியல் சேமிப்புச் சானமாகும்?

a) வன்வட்டு b) காந்த நாடா

c) புளு ரே வட்டு d) எழுமாற்றுக் கையாள்கை நினைவகம்

agaram.lk

15. உள்ளீட்டு சாதனங்கள் பற்றிய கூற்றை கருதுக

A. பட்டைக்குறி வாசிப்பான் கருவி மூலம் விலைகள் மற்றும் வேறு தரவுகளை வாசிக்கலாம்.

B. தடப்பந்து , ஒளிப்பேனா சுட்டும் கருவிகள் ஆகும்

C. OMR ஆனது பல்தேர்வு வினாக்களின் விடைகளை வாசிக்கப் பயன்படும்.

மேற்கூறித்த கூற்றுக்களில் சரியானவை எவை?

a) A, B மட்டும் b) B, C மட்டும் c) C மட்டும் d) A, B, C எல்லாம்

16. பின்வருவனவற்றுள் எது ஒரு கணிணி வன்பொருள் அன்று?

a) வரையி b) தொகுப்பி

c) தாய்ப்பலகை d) எழுமாற்றுக் கையாள்கை நினைவகம்

17. மேசைக்கணினி ஒன்றின் கொள்பணிகளைக் கருதுக.

A – பிரதான நினைவகத்தினுள் அடிப்படைச் சாதனச் செலுத்திகளை (drivers) ஏற்றுதல்

B – பிரதான நினைவத்தினுள் பிரயோக மென்பொருட்களை ஏற்றுதல்

C – தற்போக்குப் பெறுவழி நினைவகத்திற்கும், முறைவழியாக்கிக்கும் இடையில் ஓர் இடைமுகமாகச் செயற்படல்.

மேலுள்ளவற்றுள் எது/எவை ஓர் BIOS செய்நிரலின் பணிகளாகும்?

a) A மட்டும் b) B மட்டும் c) C மட்டும் d) A, B, C எல்லாம்

18. கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A – ஒரு வகுப்பிலுள்ள ஒரு மாணவன் பெற்ற சராசரி புள்ளி

B – படமொன்றிலுள்ள பாட்டு

C – படிமங்கள்

மேலுள்ளவற்றுள் எது/எவை தகவலாகும்?

a) A மட்டும் b) A, B மட்டும் c) B, C மட்டும் d) A, B, C எல்லாம்

19. நிரல் A, நிரல் B கொண்டிருக்கும் அட்டவணை பற்றிய உள்ளடக்கங்களுள் சரியான தொடர்பு பின்வரவனவற்றுள் எது?

| நிரல் A | நிரல் B |
|---|---|
| (X) காப்பெடுத்தல்<br>(Y) கோவையின் பெயர்<br>(Z) உறைகள் | (P) welcome.doc<br>(Q) கோவைகளைச் சேமித்தல்<br>(R) Fonts<br>(S) CD |

a) (X,R), (Y,Q), (Z,S) b) (X,R), (Y,P), (Z,S)
c) (X,S), (Y,P), (Z,Q) d) (X,S), (Y,Q), (Z,P)

agaram.lk

20. கீழ்வரும் விடயங்களைக் கருதுக.

A – செய்நிரல்களை சேர்த்தலும் அழித்தலும் (Add /Remove programs) B- Fonts

C- Mouse Setting D- பயனர் கணக்கு (User Accounts)

மேலுள்ளவற்றுள் எது/எவற்றை control panel கொண்டுள்ளது?

a) A மட்டும் b) A, B மட்டும் c) B, D மட்டும் d) A, B, C, D எல்லாம்

21. பின்வருவனவற்றில் எது ஒரு பணிச்செயல் முறைமை மென்பொருளன்று?

a) Winrar b) DOS c) Isuru Linux d) Ubuntu


22. பின்வருவனவற்றுள் எது ஒரு திறந்த மூல மென்பொருளாகும்?

a) Ms Power Point b) GIMP
c) Adobe Flash d) Apple keynote

23. பின்வருவனவற்றுள் எது ஒரு பணிச்செயல் முறைமையின் முக்கிய பகுதியன்று?
a) கோவை முகாமை(File Management)
b) கருவி முகாமை(Device Management)
c) Virus Scanning
d) நினைவக முகாமை (Memory Management)

24. பின்வருவனவற்றுள் எது ஒரு முறைமை மென்பொருளாகும்?
a) விரிதாள் முறைமை மென்பொருள்
b) பணிச்செயல் முறைமை
c) DTP
d) கணினி நிகழ்ச்சி நிரலாக்கம்

25. பின்வரும் படம் ஒரு கோவைகள் தொடர்பான விபரங்களைக் காட்டுகின்றது. அதிலுள்ள ஒவ்வொரு நிரலினதும் தலைப்புக்களின் சரியான ஒழுங்கைக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?



| | | | |
|---|---|---|---|
| Holiday.doc | 2 KB | Word Document | 31/10/2009 11:20 AM |
| How to.txt | 4 KB | Text Document | 2/11/2009 4:33 PM |
| Fun.jpg | 6 KB | JPEG Image | 3/11/2009 10:00 PM |
| Camp.mp3 | 1 MB | MP3 File | 5/11/2009 6:13 PM |
| Report.doc | 1 KB | Word Document | 5/11/2009 8:14 PM |

a) Name, Size, Date Modified, Type
b) Type, Size, Name, Date Modified
c) Date Modified, Size, Name, Type
d) Name, Size, Type, Date Modified

26. பின்வருவனவற்றுள் எது பிரயோக மென்பொருளன்று?
a) Adobe PhotoShop
b) GIMP
c) Mac
d) Vectorian

27. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A – கோவைகளையும் உறைகளையும் பெயர்மாற்றம் செய்யலாம்.
B – கோவைகளையும் உறைகளையும் அழிக்கலாம்.
C – கோவைகளையும் உறைகளையும் அசைக்கலாம்.
D – கோவையானது பல உறைகளைக் கொண்டிருக்கும். .
மேலுள்ள கூற்றுக்களில் சரியானது எது/எவை?
a) A மட்டும்
b) A, B, C மட்டும்
c) B, D மட்டும்
d) A, B, C, D எல்லாம்

agaram.lk

28. இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்தின் தந்தை யார்?
a) V.K.சமரநாயக்க
b) சார்ள்ஸ் பபேஜ்
c) ஆர்தர் C.கிளார்க்
d) C.W.W கன்னங்கரா

29. ஒரு ஆவணத்தில் பக்க நிலைப்படுத்தல் (page orientation) தொடர்பான கூற்றுக்களுள் சரியானது பின்வருவனவற்றுள் எது?
a) பக்க நிலைப்படுத்தலை எந்த நேரத்திலும் மாற்ற முடியும்.
b) ஒரு ஆவணத்தில் பக்க நிலைப்படுத்தலானது அச்சுப்பொறியால் தீர்மானிக்கப்படுகின்றது.
c) தட்டச்சு செய்ய முன்னர் கட்டாயம் பக்க நிலைப்படுத்தலை செய்யவேண்டும்.
d) ஒரு ஆவணத்தின் பக்க நிலைப்படுத்தலை மாற்ற முடியாது.

30. பின்வருவனவற்றுள் எந்த அம்சம் Clipboard இன் உள்ளடக்கங்களை எவ்வித வடிவமைப்பும் இன்றி பாடங்களை உட்செலுத்த உதவி புரிகின்றது?
a) Paste Special b) Format Painter c) Page Setup d) Styles

31. பின்வருவனவற்றுள் எது ஒரே கடிதத்தை பல நபர்களுக்கு அனுப்புவதற்கு சாத்தியப்படுகின்றது?
**a)** Macros b) Template c) Mail merge d) Styles

32. Gutter margin என்றால் என்ன?
a) அச்சுப்பதிவு செய்யும்போது இடது எல்லையில் சேர்க்கப்படும் ஓர் எல்லையாகும்.
b) அச்சுப்பதிவு செய்யும்போது வலதுபக்க எல்லையில் சேர்க்கப்படும் ஓர் எல்லையாகும்.
c) அச்சுப்பதிவு செய்யும்போது பக்கத்தை கட்டுவதற்கு சேர்க்கப்படும் ஓர் எல்லையாகும்
d) அச்சுப்பதிவு செய்யும்போது வெளி எல்லையில் சேர்க்கப்படும் ஓர் எல்லையாகும்.

33. பின்வரும் எக்காட்சி அச்சுப்பதிவு செய்யப்படும் பக்கத்திலுள்ள பாடங்கள் மற்றும் வரைபடங்கள் எவ்வாறு உள்ளது என்பதை நீங்கள் பார்க்க முடியும்?
a) Normal b) Print Layout c) Outline d) Web Layout

34. Undo, Save ஆகியவற்றிற்கான குறுக்கு வழிச்சாவிகள் பின்வருவனவற்றுள் எது?.
a) Ctrl+Y, Ctrl+S b) Ctrl+Z, Ctrl+S c) Ctrl+X, Ctrl+Y d) Ctrl+Z, Ctrl+X

35. ஒரு ஆவணத்தில் header and footer உட்செலுத்துவதன் நோக்கம் பின்வருவனவற்றுள் எது?
a) ஆவணத்தின் எல்லாத் தோற்றத்தையும் உயர்த்துவதற்கு
b) பக்கத்தின் ஆரம்பம் மற்றும் முடிவைக் குறிப்பதற்கு
c) பெரிய ஆவணத்தை மேலும் வாசிக்க கூடிய நிலமைக்கு உருவாக்குவதற்கு
d) அச்சுப்பதிவு செய்யும்போது ஆவணத்திலுள்ள பக்கங்களிற்கு headers and footers தோன்றுவதற்கு அனுமதியளிப்பதற்கு

agaram.lk

36. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் அடிக்கோடு இடுதல் பற்றிய கூற்றுக்களுள் தவறானது பின்வருவனவற்றுள் எது?
a) அடிக்கோட்டின் நிறத்தை மாற்ற முடியும்
b) அடிக்கோட்டின் Style மாற்ற முடியும்.
c) அடிக்கோட்டினை குறுக்குவழிச்சாவியினைப் பயன்படுத்தி உருவாக்க முடியும்
d) அடிக்கோட்டின் தடிப்பை மாற்ற முடியும்

37. மீயிணைப்பு ஒன்றை உருவாக்கும்போது, வலை முகவரியின் சொல் வடிவமைப்பு ______. ஆக இருக்கும்.
a) சரிக்கப்பட்டு மற்றும் சிவப்பு நிறமாக்கப்படும்
b) சரிக்கப்பட்டு மற்றும் நீல நிறமாக்கப்படும்
c) அடிக்கோடிட்டு மற்றும் சிவப்பு நிறமாக்கப்படும்
d) அடிக்கோடிட்டு மற்றும் நீல நிறமாக்கப்படும

38. பின்வருவனவற்றுள் பக்க அமைவிற்கான உரையாடற் பெட்டியைப் பயன்படுத்தி எதனை நீங்கள் மாற்றம் செய்ய முடியாது?
a) Margins b) Page orientation c) Vertical alignment d) Indentation

39. கணிதக் குறியீடுகளான கோண அடையாளம், பெரிது, சமன் அல்லது கிரேக்க குறியீடுகள் போன்றவற்றைக் கொண்ட குறியீட்டுத் தொடையினை பின்வருவனவற்றுள் எது அநேகமாக உள்ளடக்கியுள்ளது?

a) Wingdings  b) Wingdings 3  c) Webdings  d) Symbol

40. சொல் நிரற்படுத்தலில் நீங்கள் எந்த பக்கத்தில் இருக்கின்றீர்கள், ஆவணத்திலுள்ள பக்கங்களின் எண்ணிக்கையை காட்டுமிடம்?

a) Tool bar  b) Task bar  c) Status bar  d) Scroll bar

## பகுதி II

நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

1) a) பின்வரும் பூலியன் கோவைக்கான மெய்நிலை அட்டவணையை எழுதுக.

F=NOT ((A AND (NOT B)) OR C)

b) பின்வரும் பதின்ம எண்களைத் துவித எண்களாக மாற்றுக?

(i) 46  (ii) 77

c) பின்வரும் துவித எண்களைப் பதின்ம எண்களாக மாற்றுக?

(i) 101011  (ii) 1100111

2) a) அட்டவணையானது சேமிப்பு ஊடகங்களின் பட்டியலைக் காட்சிப்படுத்துகின்றது. தரவானது மாற்றம் செய்ய முடியுமா அல்லது இல்லையா என ஒவ்வொரு நிரையையும் சரியிடுக

| சாதனம் | தரவை மாற்றம் செய்ய முடியும் (✓) | தரவை மாற்றம் செய்ய முடியாது (✓) |
|---|---|---|
| Hard disk | | |
| ROM | | |
| Pen drive | | |
| RAM | | |
| CD-RW | | |

b) கீழ்வரும் ஒவ்வொரு விடயமும் வன்பொருளா அல்லது மென்பொருளா என வகைப்படுத்துக

CD-ROM செலுத்தி, இணைய உலாவி, மத்திய நிரற்படுத்தல் அலகு, விரிதாள், நச்சுநிரல் எதிர்ப்பு வருடி

c) கீழேயுள்ள கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா எனக் கூறுக?

(i) உணரிகள் வருவிளைவுச் சாதனங்களாகும்..

(ii) மின்னஞ்சல் எப்பொழுதும் நச்சுநிரல்களை ஊடுகடத்தும்.

(iii)இணையத்திலுள்ள தகவல்கள் எப்பொழுதும் சரியானவை.

(iv) அலுவலகங்களில் உயர்தர பல அச்சுப்பிரதிகளை Dot Matrix பொறி உருவாக்குகின்றது.

(v) வலையமைப்பிலுள்ள கோவைகளை காப்பெடுக்க காந்த நாடாக்கள் பயன்படுத்தப்படுகின்றது.

agaram.lk

3) a) கணினி ஒன்றை வாங்கும்போது கருத்திற் கொள்ள வேண்டிய நான்கு அம்சங்களைப் பட்டியற்படுத்துக?


b) மத்திய நிரற்படுத்தல் அலகின் பிரதான பகுதிகளை எழுதுக?

c) காந்தவியல் சேமிப்புச் சாதனங்களுக்கு நான்கு உதாரணங்களை எழுதுக?

4) a) பணிச்செயல் முறைமையின் மூன்று பயன்பாடு சேவை செய்நிரல்களை எழுதுக?

b) வரைவியல் பணிச் செயல் முறைமையின் பிரதான பகுதிகள் நான்கை எழுதுக?

c) கீழே காணப்படும் வரிப்படம் வெற்று வெளிகள் உள்ள ஓர் அடைவு (directory) மர கட்டமைப்பாகும்.





இவ்வரிப்படத்தை எமது விடைத்தாளில் நகல் செய்து, பின்வருவனவற்றைக் கருதுவதன் மூலம் சரியான முகப்பு அடையாளங்களுடன் வெற்றுப் பெட்டிகளை நிரப்புக.

i) 'Maths' ஆனது தாய் அடைவு 'Subject' என்பதன் ஓர் உப அடைவாகும்.

ii) 'email' என்பதன் தாய் அடைவு 'ICT' ஆகும்.

5) கீழே காட்டப்பட்டுள்ள ஆவணத்தை வாசித்து வினாக்களுக்கு விடைளிக்குக



இவ் ஆவணமானது சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் கிடைக்கும் பொதுவான சில வடிவமைப்புக் கருவிகளைக் கொண்டு வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளது. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளிலுள்ள இக்கருவிகள் உரு2 இல் 1-19 வரை முகப்பு அடையாளமிடப்பட்டுள்ளன.





**Figure 2**

மேலே உரு2 இல் ( 1-19) தரப்பட்ட அடையாளங்களைப் பயன்படுத்தி கீழே தரப்பட்ட பணிகளைச் செய்வதற்கு தேவையான கருவிகளின் முகப்பு அடையாளத்திற்குரிய எண்களை எழுதுக.

(i) **A** என முகப்பு அடையாளமிடப்பட்டுள்ளவாறு ஆவணத்தின் தலைப்பினை மையப்படுத்துக.

(ii) ஆவணத்தின் தலைப்பின் எழுத்துப் பருமன் 14 இற்கு அதிகரிக்கச் செய்க.

(iii) ஆவணத்தின் தலைப்பை தடிப்பாக்குக. (bold)

(iv) **A** இனால் காட்டப்பட்டுள்ள பாடத்தில் அடிக்கோடிடுக.(Underline)

(v) **C** இனால் காட்டப்பட்டுள்ளதை உருவாக்குக.

(vi) **D** இனால் காட்டப்பட்டுள்ளதை உருவாக்குக.

(vii) **F** இனால் காட்டப்பட்டுள்ளதை உருவாக்குக.

(viii) **B** இனால் காட்டப்பட்டுள்ள படத்தை உட்செலுத்துக.

(ix) **E** இனால் காட்டப்பட்டுள்ளதன் பாட நேர்ப்படுத்தலை உருவாக்குக.

agaram.lk